සියලුම හිමිකම් ඇවිරිණි
All Rights Reserved

# வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
# இரண்டாம் தவணைப் பரீட்சை - 2018

தரம் : 11

**தமிழ் மொழியும் இலக்கியமும்** / දෙමළ භාෂාව - I நேரம்: 1 மணித்தியாலம்

---

- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. வினாத்தாள் I இற்குரிய புள்ளிகள் 40 ஆகும்.
- 1 – 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3),(4) என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
- உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் எண்ணை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (x) இடுக.

---

- **தடித்த எழுத்தில் அமைந்த சொல் பற்றிய வினாவுக்கு பொருத்தமான விடையை தெரிவு செய்க.**

1. “**பூத்த ஜோதி வதனம் திரும்பு மேல் புலனழிந்தொரு புத்துயிர் எய்துவேன்** “ என்ற பாடலில் வதனம் என்று குறிப்பிடுவது.
   i. நெற்றி ii. உடம்பு iii. பிரகாசம் iv. முகம்

2. “**புல்லர் நல்லோரைக் கண்டே…**” புல்லர் என்பதன் பொருள்.
   i. உயர்ந்தவர் ii. அறிவுடையவர் iii. தாழ்ந்தவர் iv. பண்புடையோர்

3. “**ஏதம் கொண்டூதியம் போகவிடல்** “ ஏதம் என்பதன் ஒத்த கருத்து
   i. குற்றம் ii. அறிவு iii. நல்லது iv. வழி

4. “**உயிருடன் சென்ற ஒரு மகன் தன்னினுஞ்…**” ஒரு (ஒன்று) என்பதன் எதிர் பதம்
   i. இரண்டு ii. இரு iii. பல iv. இரண்ட மூன்று

5. **சபையில் கொண்டுவரப்பட்ட பிரேரணை சிலரால் ஆட்சேபிக்கப்பட்டது** ஆட்சேபித்தல் என்பதன் கருத்து.
   i. நிராகரித்தல் ii. ஆமோதித்தல் iii. பிரேரித்தல் iv. அமுலாக்குதல்

- **பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

6. ஒரு நூலுக்கு நூலாசிரியர் தவிர்ந்த பிறர் வழங்கும் புகழுரை.
   i. மதிப்புரை ii. பதிப்புரை iii. முன்னுரை iv. அணிந்துரை

7. இடையர் குலப் பெண்களைக் குறிக்கும் சொல்
   i. ஆய்ச்சியர் ii. குறத்தியர் iii. வலைச்சியர் iv. உழத்தியர்

8. வருடங்கள் பல வெளிநாட்டிலிருப்பவர்கள் சிடிசன்சிப் (citizen ship ) கிடைப்பதற்கு முயற்சி செய்து ஏமாறுகின்றனர். சிடிசன்சிப் எனும் கலைச்சொல்லின் தமிழ் வடிவம்.
   i. செலவுப்பணம் ii. செலாவணி iii. பிரஜா உரிமை iv. கடவுச்சீட்டு

9. யானையின் இளமைப் பெயர்
   i. குருளை ii. பிள்ளை iii. பறள் iv. போதகம்

10. பல்லி சொல்லும், கோழி
    i. கத்தும் ii. கரையும் iii. கேரும் iv. அகவும்

11. ஆரம், கண்ணி, தொடை என்பன குறிக்கும் சொல்
    i மலர் ii. மாலை iii. கால் iv. வெடி

12. நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும் என்ற அருஞ் சொற்றொடரினால் குறிக்கப்படுவது.
    i. வளர்ச்சி ii. தேய்வு iii. மறைவு iv. தளர்ச்சி

13. பின்வருவனவற்றுள் போர்த்துக்கேய மொழிச் சொல்லாக அமைவது
    i. சப்பாத்து ii. இலாச்சி iii. பட்டாளம் iv. வசூல்

14. அரண்மனையில் மகளிர் தங்குவதற்குரிய தனி இடம்
    i நிலாமுற்றம் ii. ஓலக்கம் iii. உப்பரிகை iv. அந்தபுரம்

15. பாண்டவர்கள் ஒரு வருடகாலம் பிறர் அறியாதவாறு மாறு வேடத்தில் வாழ்ந்தனர் இவ்வாறு மறைந்து வாழ்தலை குறிக்கும் சொல்.
    i. வனவாசம் ii. அஞ்ஞாதவாசம் iii. சுகவாசம் iv. தேசாந்திரம்

- **பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க**

16. புறமுதுகிடல் என்ற மரபுத்தொடருக்குச் சமமான பிறிதொரு மரபுத்தொடர்
    i. அடிநகர்தல் ii. அடிப்படுதல் iii. அடிபிறக்கிடல் iv. அடிபிடித்தல்

17.தன் மரபை அல்லது வம்சத்தை புகழ் பெறச்செய்தல் என்ற பொருள் தரும் மரபுத்தொடர்
    i. அடிப்படுத்தல் ii. கைகொடுத்தல் iii. ஆட்கொள்ளுதல் iv.அடிவிளக்குதல்

18. அண்ணளவானது என்ற கருத்தைத் தரும் தொடர்
    i. கிட்டத்தட்ட ii. திட்டவட்டமாக iii. அரைகுறை iv. கையுங்கணக்கும்

19. "சேற்றில் புதைந்த யானையைக் காகமும் கொத்தும்" என்ற பழமொழி தரும் உட்கருத்து
    i. ஆனையானாலும் அடி சறுக்கும்
    ii. தந்திரமுள்ள காக்கையால் வலிமையுடைய யானையையும் வெல்ல முடியும்
    iii. ஆனைக்கொரு காலம் பூனைக்கொரு காலம்
    iv. உயர்ந்த நிலையிலிருந்து ஒருவர் தன்னிலை தாழும் போது மிக எளியரும் அவரைத் துன்புறுத்துவர்

20. தமக்கு வேண்டிய பொருள் அண்மையிலே இருக்க அதனை எங்கெங்கோ தேடி அலைதல் என்பதை விளக்கப் பயன்படுத்தப்படும் உவமைத்தொடர்
    i. ஏவற்பேய் கூரையைப் பிடுங்கியது போல
    ii. உட்சுவர் இருக்கப் புறச்சுவர் கோலஞ் செய்வது போல
    iii. உறியில் வெண்ணெய் இருக்க ஊரெல்லாம் நெய்க்கு அலைதல் போல
    iv. அகலாது அணுகாது தீய்க்காய்வர் போல

21. தமிழ் நெடுங்கணக்கு ஒழுங்கில் அமையாத சொற் கூட்டம்
    i. இலை, ஈட்டி, உறி, ஊதல் ii. நிலம், நீலம், நுங்கு, நூபுரம்
    iii. கரகம், சட்டி, தட்டி, ஞமலி iv. தங்கம், பட்டம், மரம், வண்ணம்

22. பின்வருவனவற்றுள் கூட்டுப் பெயராக வருவது
    i. கமலம் ii. நீரேரி iii. கவிதை iv. மடந்தை

23. பின்வருவனவற்றுள் தொழிற் பெயராக அமையாதது
    i. ஓடுதல் ii.ஓட்டம் iii ஓடும் iv.ஓடல்

24. கால்தவறி விழுந்தவனை கைகொடுத்துத் தூக்கினேன் விழுந்தவனை என்பது
    i. வினையெச்சம் ii. தொழிற்பெயர்
    iii வினையாலணையும் பெயர் iv. குறிப்பு வினைமுற்று

25. அப்பா நாளைக்கு வருவார் என்று தம்பி சொன்னான். இது
   i. தனிவாக்கியம் ii. தொடர் வாக்கியம்
   iii. கூட்டு வாக்கியம் iv. கலப்பு வாக்கியம்

26. எனது தாயார் விருந்தினருக்கு அறுசுவை உணவு பரிமாறினார்.
   இங்கு அறுசுவை என்பது
   i. வினைத்தொகை ii. பண்புத்தொகை
   iii. உவமைத்தொகை iv.உம்மைத்தொகை

27. பின்வருவனவற்றுள் விளித்தொடராக வருவது
   i தந்தை வந்தார் ii. மகனே வா
   iii ஆடினாள் மாதவி iv.உண்டு மகிழ்ந்தான்

28. பின்வருவனவற்றுள் கெடுதல், தோன்றல் விகாரம் இரண்டும் இடம் பெற்ற சொல்
   i. கடற்கரை ii. குளக்கரை iii. நதிக்கரை iv. ஏரிக்கரை

29. பின்வருவனவற்றுள் வினை முற்று தொடராக அமைவது
   i. கவிதா பாடினாள் ii. பாடிய கவிதா iii. பாடினாள் கவிதா iv. கவிதா வா

30. அவன் ஒழுங்காகப் படிக்கவில்லை
   அவன் பரீட்சையில் சித்தியடையவில்லை
   மேற்படி இரு வாக்கியங்களையும் இதே ஒழுங்கில் இணைப்பதற்குப் பொருத்தமான
   இணைப்பிடைச் சொல்
   i எனினும் ii. என்றாலும் iii. எனவே iv. இருப்பினும்

- **புள்ளிக் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க**

31. இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தருக்கு அவர் ஆற்றிய சேவைக்காக
   மாதாந்தம் .............. வழங்கப்படும்
   i ஓய்வூதியம் ii. மானியம் iii. வேதனம் iv. சன்மானம்

32.ஒரு வேலையைக் குறிப்பிட்ட கால எல்லைக்குள் நிறைவேற்றித் தருவதாக
   ஒருவருக்கு.......... அளித்தால் அதனை மீறக்கூடாது
   i ஒப்பந்தம் ii. ஒப்படை iii. உச்சவரம்பு iv. உத்தரவாதம்

33. போதைவஸ்துக்களைப் பயன்படுத்துவதால் ஏற்படக்கூடிய ஆபத்துகள் பற்றி
   இளைஞர் மத்தியில்.............மேற்கொள்ளப்படல் வேண்டும்.
   i பிரசுரம் ii. பிரசாரம் iii. பிரகாரம் iv. பிரகடனம்

34. வரவு செலவுத்திட்டத்தில் துண்டுவிழும் தொகையை ஈடுசெய்வதற்காக அரசாங்கம்
   புதிய ........... விதிக்கவுள்ளது.
   i பிரேரணைகளை ii. கடன்களை
   iii மானியங்களை iv. வரிகளை

- **பின்வரும் வினாக்களிலுள்ள வாக்கியத்தின் முற்பகுதிக்கு மிகப் பொருத்தமான முடிக்கும் பகுதியை தெரிவு செய்க.**

35. கவரிமான்கள் உயிர் நீப்பின் கணப்பொழுதும்
   i. உயிர் வாழாது ii. உயிர் வாழ மாட்டாது
   iii உயிர் வாழா iv. உயிர் வாழும்

36. நகைச்சுவைக் காட்சியைத் தொலைக்காட்சியில் பார்த்துக் கொண்டிருந்த கலைவாணன்
   i. படபடவென்று சிரித்தான் ii. கலகலவென்று சிரித்தான்
   iii. கடகடவென்று சிரித்தான் iv. குளுகுளுவென்று சிரித்தான்

- **தரப்பட்ட பாடலை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடை தருக**

காலை மலர்ந்தது செங்கதிர் எழுந்தான்
கண் மலர் வீரோ உலகில் மாந்தரே !
வேலை தொடங்கும்வீர் மெய்யான வழியில்
விருப்பமும் குறிப்பும் அறமெனக் கொள்வீர்
ஆலையிற் கரும்பு போல் வாடினார் பல்லோர்
அவர்களை மீட்டல் அறத்தின் முதன்மையாம்
சோலையிற் குயில்கள் பாடி நலஞ்செயும்
துளிரன்றி ஆயிரம் தேடுவதில்லையே

37. இப்பாடலில் எது பற்றி கூறப்படுகிறது?
    i. செங்கதிர் பற்றிக் கூறப்படுகிறது.
    ii. மக்கள் தொழில் பற்றிக் கூறப்படுகிறது.
    iii. காலை பற்றிக் கூறப்படுகிறது.
    iv. சோலைக் குயில் பற்றிக் கூறப்படுகிறது.

38. இப்பாடலில் வரும் உவமானம் யாது?
    i. மக்கள  ii. ஆலை  iii. கரும்பு  iv. போல்

39. இப்பாடலில் எது மலர்ந்தது எனக் கூறப்படுகிறது ?
    i. பூ  ii. செங்கதிர்  iii கண்மலர்  iv. காலை

- கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன அவற்றை ஒழுங்குபெற வைத்தால் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும் அதற்கேற்ற பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.

40. அ - இன்பம் வரும் போது மகிழ்கிறோம்.
    ஆ - அந்த இரண்டும் எல்லோரது வாழ்க்கையிலும் வந்து போகின்றன.
    இ - ஆனால் துன்பம் வரும் போது துவண்டுவிடுகிறோம்.
    ஈ - இன்பமும் துன்பமும் கலந்ததே உலகம்.
    உ- அவ்வாறன்றி இன்பத்தையும் துன்பத்தையும் சமமாக ஏற்றால் எமது வாழ்க்கை அமைதி நிறைந்ததாய் அமையும்.
    i. ஈ, ஆ, அ, இ, உ  ii. உ, ஈ, இ, ஆ, அ
    iii. இ, ஈ, அ, உ, ஆ  iv. ஆ, உ, இ, அ, ஈ

සියලුම හිමිකම් ඇවිරිණි
All Rights Reserved

# வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
# இரண்டாம் தவணைப் பரீட்சை - 2018

தரம் : 11

**தமிழ் மொழியும் இலக்கியமும்** / දෙමළ භාෂාව - II நேரம்: 2 மணித்தியாலம்

---

* **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. விடைகளை தெளிவான கையெழுத்தில் எழுதுக.**

01. பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமான விடை எழுதுக.

   01. மென் கால் சிறையன்னம் வீற்றிருந்த மென்மலரைப் புன்காகம் கொள்ளத்தான் போனாற் போல். இதனை சந்திப்பிரித்தெழுதுக.
   02. பெயர்ப்பயனிலை வரக்கூடியவாறு இரு வாக்கியங்கள் எழுதுக.
   03. ஒரு வாக்கியத்தில் செயப்படுபொருளை எழுவாயாகக் கொள்ளும் வினை எவ்வாறு அழைக்கப்படும்.
   04. பிரதேச வழக்குச் சொற்களில் இரு வகைகளையும் எழுதுக.
   05. சின்னப் பிள்ளைக்கு என்ன ரூர். நீ துருதுரெண்டு இதிலே நிக்கிறன் எண்டு அதிலே நிற்பாய்.
   இதனை நியம எழுத்து வழக்கிற்கு மாற்றி எழுதுக.
   06. மை, படை ஆகிய ஒட்டுக்களை பின்னால் சேர்த்து இவ்விரு சொற்களை உருவாக்குக.
   07. பின்வரும் வாக்கியத்திலுள்ள இலக்கணப் பிழைகளை நீக்கி திருத்தி மீண்டும் எழுதுக.
   பணத்தை வயோதிப காலத்தில் செலவு செய்வதற்காகச் சேமிக்கப்படல் வேண்டும்.
   08. விவாதமொன்றை நிகழ்த்தும் போது நீக்கப்பட வேண்டிய விடயங்கள் ஏதேனும் இரண்டு எழுதுக.
   09. மற்றும், தோறும் ஆகிய இணைப்பிடைச் சொற்களுக்குப் பொருந்தும் வகையில் வாக்கியங்கள் இரண்டு எழுதுக.
   10. கண்ணிமை, வேற்கண் என்பன எவ்வகைத் தொகைகளாகும்.

(20 புள்ளிகள்)

02. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு கட்டுரை வரைக.

   (அ) முதியோர் எனப்படுவோர் எமது மூத்தத் தலைமுறையினர். ஒவ்வொரு வீட்டிலும் முதியோர் இருப்பாராயின் அந்த சமூகம் சிறந்த ஒழுக்கமுள்ள சமூகமாக மிளிறும் என்பதில் ஐயப்படுவதற்கில்லை. ஆனால் இன்றைய இளைஞர் சமுதாயம் முதியோர்களை சுமையாகக் கருதி முதியோர் இல்லங்களில் சேர்த்து விடுகிறது. அவர்களின் உழைப்பின் பயனையே நாம் அனுபவிக்கிறோம். அவர்களே பண்பாட்டின் தூண்கள் என்பதை கருத்திற் கொண்டு நீர் ஆற்றும் சொற்பொழிவு.

   (ஆ) இயற்கையன்னை எமக்களித்த பெருஞ்செல்வமே இயற்கை வளங்கள். இதில் காடு முக்கிய இடத்தை வகிக்கின்றது. காட்டு வளமானது பேணிப்பாதுகாக்கப்பட வேண்டிய ஒன்றாகும். எனினும் மனிதன் தனது பல்வேறு தேவைகளுக்காக காட்டை அழிக்கின்றான். இறுதியில் தனக்கே தீங்கை தேடிக்கொள்கின்றான். எனவே இவ்வாறான செயற்பாடுகளிலிருந்து காட்டுவளம் பேணும் வகையில் ஒரு விளக்கக் கட்டுரை.

(இ) இன்று எமது நாட்டில் பெண்கள் மீதான குற்றச் செயல்கள் அதிகரித்து வருவதால். இவ்வாறான குற்றங்களைப் புரிவோருக்கு உடனுக்குடன் தண்டனை வழங்குவதோடு மட்டுமன்றி ஏனையவர்கள் குற்றம் செய்யாதிருக்கும் வகையில் மரணதண்டனையே வழங்கவேண்டும் என்ற கருத்தினை ஏற்கும் ஒருவருக்கும், இதனை எதிர்க்கும் ஒருவருக்குமிடையிலான உரையாடல்.

(ஈ) சாதி, சமயம், குலம், கோத்திரம் என சாதி தலைவிரித்தாடிய காலத்தில் ஸ்ரீஸ்கந்தன் அவரது ஊரில் பெருமதிப்பிற்குரியவராக வாழ்ந்து வந்தார். ஆசைக்கும், ஆஸ்த்திக்குமென ஏக புதல்வனாய் சங்கர்… ஆம் சங்கரின் தாய் இன்று உயிருடன் இல்லை. சங்கர் தன் மனைவி பிள்ளைகளுடன் கனடாவில் வசித்து வருகிறான்… இவ்வாறிருக்க ஸ்ரீஸ்கந்தரின் இன்றைய நிலை உமது கற்பனைக்கு… சிறுகதையாக…

(25 புள்ளிகள்)

03. பின்வரும் உரைப்பகுதியை வாசித்து 40 – 45 வரையிலான சொற்களுக்கு மேற்படாதவாறு சுருக்கி எழுதுக.

வேளாண்மை நாகரிகத்தில் ஒவ்வொரு சிற்றூரும் அதற்குத் தேவையான தொழிநுட்பத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் திறன் கொண்டவையாக இருந்தன. அவர்களது தேவைக்கேற்ப தச்சர், கொல்லர், குயவர், கொத்துத்தொழில் செய்வோர், காலணி செய்வோர், உடைவெளுப்போர் எனத் தன்னிறைவு கொண்ட சமுதாயமாக இருந்தது தொழில் நகரத்திலும் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் தொழில் நுட்பத்திறன் உள்ளதாக ஒவ்வொரு சிற்றூரும் அமைய வேண்டும் அந்த அளவிற்கு அறிவியலும் தொழில் நுட்பமும் பரவலாக மக்களிடத்தில் இடம்பெற வேண்டும். அது பல வகையான பருப்பொருளாக மட்டுமன்றி மக்களது பார்வையிலும் அணுகுமுறையிலும் பிரதிபலிக்க வேண்டும்.

அறிவியல் பார்வை எத்தனையோ விருப்பு, வெறுப்புகளை முழுமையாகநீக்காவிட்டாலும் கணிசமாகத் தளர்த்தும் தன்மையுடையது. கருத்துக்குத் தெளிவூட்டும் திறனுடையது. தன் முயற்சிக்கு ஊக்கமளிக்கும் கருவுடையது வாழ்க்கையில் பல பரிமாணங்களைச் சற்றுப் புதிய கோணத்தில் பார்க்கும் வாய்ப்புகளைப் படைக்கும் வாயில்களைத் திறக்கும் இயற்கையைக் கொண்டது.

(10 புள்ளிகள்)

04. கீழே தரப்பட்டுள்ள பந்தியை வாசித்து கிரகித்து அதன் கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையெழுதுக.

இன்றைய யுகம் விஞ்ஞான யுகம் எனப்படுகிறது. மனித வாழ்க்கையோடு விஞ்ஞானம் பிரிக்க முடியாத வகையில் தொடர்பு கொண்டுள்ளது. சமூக முன்னேற்றத்திற்கே விஞ்ஞானம் இன்று அடித்தளமாக அமைந்துள்ளது. எனவே விஞ்ஞானத்திற்கும் சமூகத்திற்குமிடையேயுள்ள தொடர்பினை ஆராய்தல் பயனுடையதாக அமைகிறது. சமூகம் என்பது பல்வேறு சேர்க்கைகளின் பிரதிபலிப்பாகும். பல சமூக அமைப்புகள் இன, மொழி, பண்பாடு, பழக்கவழக்கங்கள் ஆகியவற்றினை அடிப்படையாகக் கொண்டே காணப்படுகின்றன. இத்தகைய கூட்டத்தினர் ஓர் இடத்தில் கூடி வாழும் போது அவர்களை ஒரு சமூகத்தினர் என்றழைப்பர். இத்தகைய சமூகம் இன்று முன்னேற்றப் பாதையில் விரைந்து செல்வதற்கு விஞ்ஞானம் துணை புரிகிறது. விஞ்ஞானம் இன்று மனித வாழ்க்கையுடன் பிரிக்க முடியாத வகையில் தொடர்பு கொண்டுள்ளது. நாளுக்கு நாள் இத்தொடர்பு வலுப்பெற்று வருகிறது.

ஆரம்ப காலத்தில் காட்டுமிராண்டியாக வாழ்ந்த மனிதர்கள் நாகரிகமுற்று நல்ல பண்பாடுகளை கற்றுக் கொள்வதற்கு விஞ்ஞான கண்டுபிடிப்புக்களே. அவர்களுக்குத் துணை செய்தன எனலாம். மருத்துவத் துறையில் இன்று மகத்தான வளர்ச்சி ஏற்பட்டுள்ளதென்றால் அதற்கும் விஞ்ஞானத்தின் வளர்ச்சியே காரணமாகும்.

1. மனித வாழ்வோடு விஞ்ஞானம் எவ்வாறு தொடர்பு கொண்டுள்ளது.?
2. விஞ்ஞானம் எதற்கு அடித்தளமாகவுள்ளது?
3. சமூக அமைப்புக்கள் எதனை அடிப்படையாகக் கொண்டுள்ளன?
4. ஒரு சமூகத்தினர் என்றழைக்கப்படுவோர் யாவர்?
5. விஞ்ஞானத்தின் வளர்ச்சியினால் மருத்துவத் துறையில் ஏற்பட்ட வளர்ச்சி மூன்று தருக.

(10 புள்ளிகள்)

05. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து 100 சொற்களில் எழுதுக.

1. உமது பிரதேசத்தில் அதிகளவிலான தமிழ் பேசும் மக்கள் வசிக்கின்றனர். ஆயினும் அவர்களுக்கென ஒரு வாசிகசாலை இன்மை பெரும் குறைபாடாகவே உள்ளது. எனவே வாசிகசாலையொன்றை அமைத்துத் தருமாறு உள்ளூராட்சி மன்றத்தலைவருக்கு ஒரு கடிதம் எழுதுக.
2. உமது பாடசாலையில் நடைபெற்ற தமிழ் மொழித்தின விழா பற்றி பத்திரிகைச் செய்தியொன்று எழுதுக.

(15 புள்ளிகள்)

සියලුම හිමිකම් ඇවිරිණි
All Rights Reserved

# வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
# இரண்டாம் தவணைப் பரீட்சை - 2018

தரம் : 11

**தமிழ் மொழியும் இலக்கியமும் - III**

දෙමළ භාෂාව - III

நேரம்: 2 மணித்தியாலம்

- **அறிவுறுத்தலுக்கேற்ப ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**
- **1, 2, 3, 4 ஆகிய வினாக்களுக்கும் 5, 6, 7 ஆம் வினாக்களில் ஏதாவது ஒரு வினாவிற்கும் விடை எழுதுக.**

1. சுருக்கமான விடை தருக.

(1) நாணாமை நாடாமை நாரின்மை யாதொன்றும் பேணாமை பேதை தொழில்
அ. இங்கு நாரின்மை என்பதன் பொருள் யாது?
ஆ. பேதையின் தொழில்கள் யாவை?

(2) குன்றெனவே நிமிர்ந்தோங்கி குதூகலிக்கும் தோள்கள் குணக்குன்றாய் உழைத்துண்ணும் குளவிளக்காம் மனிதன்
அ. இதில் வந்துள்ள அணி யாது ?
ஆ. இதில் யாரை கவிஞர் சிறப்பித்துள்ளார் ?

(3) அற்றைத் திங்கள் அவ் வெண் நிலவில் எந்தையும் முடையோம் எம் குன்றும் பிறர் கொளார்
அ. இக் கூற்று யாரால் கூறப்பட்டுள்ளது ?
ஆ. அன்று பறம்புமலை இருந்த நிலை எவ்வாறு காட்டப்படுகிறது ?

(4) இரத்தம் உறைந்து போய் கால்கள் மரத்து விட வில்லை
அ. இக் கூற்றுக் குரியவர் யார் ?
ஆ. இக் கூற்றின் மூலம் வெளிப்படுத்தப்படும் விடயம் என்ன ?

(5) பதியிழந்தனம் பாலனை யிழந்தனம் படைத்த
நிதியிழந்தனம் இனி நமக்குள தென நினைக்கும்
அ. இப்பாடல் அமைந்துள்ள காவியம் எது ?
ஆ. இங்கு பாலன் எனக் குறிப்பிடப் படுபவன் யார் ?

(6) "பங்கப்பழனத் துழு முழவர்
பலவின் கனியை பறித்த தென்று"
அ. இப்பாடலைப் பாடியவர் யார் ?
ஆ. இப்பாடலில் எதைப் பற்றி விளக்கப்படுகிறது ?

(7) "கோக்கள் வைகும் முற்றத்தான் முதல் தேவி"
அ. இது யாரால் யாருக்கு கூறப்பட்டது ?
ஆ. எச் சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது ?

(8) கூனலிளம் பிறை முடித்த வேணியலங்காரர்
அ. வேணி அலங்காரர் எனப்படுபவர் யார் ?
ஆ. வேணி என்பதன் பொருள் யாது ?

(9) "விசைக் கட்டளைகளில் அவன் விரல்கள் வண்ணாத்துப்பூச்சி பறப்பது போல
தொட்டு தொட்டு பறந்த படியே இருக்கும்"
அ. இப்பகுதியில் இடம் பெற்றுள்ள அணி யாது ?
ஆ. அணியினை விளக்குக.

(10) திரிகடுகம் என்ற நீதி நூலில்
அ. உடலுக்கு நன்மை தரும் மருத்துவப் பொருட்கள் எவை ?
ஆ. வாழ்க்கைக்கு நன்மை தராத மூன்று விடயங்கள் எவை ?

2. (1) *சூழும் மாயவுலகினிற் காணுறுந்*
*தோற்றம் யாவையும் மானத மாகுமால்*
*ஆழு நெஞ்சகத் தாசையின் றுள்ளதேல்*
*அதனு டைப்பொருள் நாளை விளைந்திடும்*
*தாழு முள்ளத்தர் சோர் வினர் ஆடுபோல்*
*தாவித்தாவிப் பல பொருள் நாடுவோர்*
*வீழு மோரிடை யூற்றினுக் கஞ்சுவோர்*
*விரும்பும் யாவும் பெறாரிவர் தாமன்றே.*

I. தாம் விரும்பும் எதனையும் பெற்றுக் கொள்ள மாட்டாதவர்கள் யாவர் ?
II. ஒருவர் தாம் விரும்பியவற்றை அடையாமற் போவதற்கான காரணங்கள் யாவை ?

(2) ஆழப் புதைந்த தேயிலைச் செடியின்
அடியிற் புதைந்த அப்பனின் சிதை மேல்
ஏழை மகனும் ஏறி மிதித்து இங்கெவர்
வாழவோ தன்னுயிர் தருவான்.

I. இவ்வடிகள் எதைப் புலப்படுத்துகின்றது.
II. இங்கெவர் வாழவோ தன்னுயிர் தருவான். என்ற தொடரின் பொருள் யாது ?

(3) தாலாட்டில் அசைந்திருந்த
தொட்டில் வரை ரத்த வெள்ளம்
பால் வார்த்த நிலாமுகத்தில்
பற்றி விட்ட தீப்பந்தம்
ஏலம் பூ வாய் பொசுங்க
எறியுறது தீக்கொழுந்து
காலப் புனல் கனக்கும்
கண்ணீரையும் சுமந்து.

I. இத்தாலாட்டு பாடலில் போரினால் ஏற்பட்ட விளைவுகளாக கொள்ளப்பட்டவை யாவை ?
II. மக்களது பறம்புமலை துயரம் எவ்வாறு எடுத்துக் காட்டப்படுகிறது ?

(4) இரண்டாவது அம்சம் ஒலி இது காட்சிப்படிமங்களுக்குத் தாங்கலாக வருவது சினிமாவில் பலவிதப்படும் பேசும் வார்த்தைகள், இயல்பான ஒலி (பறவைகளின் இரைச்சல் ஓடும் நதியின் சலசலப்பு) கடைசியாக இசை இசையே இல்லாத பாடல்களும் உண்டு. எங்கே ஒலி முக்கியத்துவம் பெற்றுக் காட்சிப்படிமங்கள் இரண்டாவது இடத்துக்குத் தள்ளப்படுகின்றதோ அங்கே சினிமா சீரழிந்து தாழ்ந்து போகின்றது.
I. சினிமாவில் ஒலி பலவகைப்படும் அவை எவை ?
II. சினிமா சீரழிந்து தாழ்ந்து போவதற்குக் கூறப்படும் ஒரு காரணம் தருக.

(5) இத்தனைக்கும் ஒரு நோய் வந்தா படுக்கையில் கிடந்து அழமாட்டா ஆஸ்பத்திரி என்றுஅலையமாட்டா. ஆடாதோடையும் கொத்தமல்லியும் அவித்து குடித்து எழுந்து நடக்குறா. அக்கம் பக்கம் யாருக்கும் நோய் பிடித்தாலும் கூப்பிடாத வைத்தியராய் ஓடிப்போய் மருத்துவம் செய்வா. ஊரில் எது நடந்தாலும் மூத்தம்மா தான் வேண்டும்.

கைராசிக்காரி நீங்கள் தான் மாமி என்ர தலப்புள்ளய ஏந்தனும்.

I. இங்கு கைம்மருந்துக்குப் பயன்படும் மூலிகைகள் எவை எனக்கூறப்படுகிறது ?

II. "கைராசிக்காரி நீங்கள் தான் மாமி என்ர தலப்புள்ளய ஏந்தனும்" என்ற வரிமூலம் உணர்த்தப்படுவது யாது?

3. நாவலர் எழுந்தார் என்ற கட்டுரையில்

(அ) சட்டசபைக்குத் தகுதியான பிரதிநிதித்துவத்தை தெரிவு செய்வதில் நாவலர் காட்டிய ஈடுபாடு

(ஆ) நாவலருடைய ஈடுபாட்டைக் காட்டுவதற்குக் கட்டுரையாசிரியர் கையாண்ட உத்திகள் என்பன புலப்படுமாற்றை விளக்குக.

அல்லது

"மூத்தம்மா" என்ற சிறுகதையில்

(அ) மூத்தம்மாவின் குடும்ப அக்கறை

(ஆ) ஆளுமைப் பண்பு ஆகியன ,

வெளிப்படுமாற்றினை விளக்குக.

4. I. அற்றைத் திங்கள் என்ற நாடகத்தில் பறம்புமலையின் அன்றைய நிலையும் இன்றைய நிலையும் எவ்வாறு காட்டப்படுகிறது ?

II. பறம்புலையை விட்டுப் பிரிய முன் கபிலரின் மனக்குமுறல்கள் வெளிப்படுமாற்றினை விளக்குக.

அல்லது

திருக்குற்றாலக் குறவஞ்சி என்ற பாடப்பகுதியில்,

அ. நாட்டு வளம்.

ஆ. திரிகூடநாதரின் சிறப்பு

என்பன விபரிக்கப்படுமாற்றினை விளக்குக.

5. குகப்படலத்தை அடிப்படையாகக் கொண்டு

I. குகனின் சிறப்பு கூறப்படும் விதம்

II. இப்பாடல்களில் கையாளப்பட்டுள்ள உத்திகள் என்பவற்றினை விளக்குக.

6. சீறி ஓடாத வருடங்கால மனித நதி என்ற கவிதையைக் கொண்டு

I. எழுத்தறிவற்ற ஒருவன் மீது கவிஞர் கொண்ட பரிதாப நிலை.

II. கல்வி அற்றவரின் எதிர்கால நிலை போன்றவற்றை கவிஞர் விபரிக்குமாற்றினை தருக.

7. I. கம்பியூட்டர் என்னும் சிறுகதையில் கம்பியூட்டரால் ஏற்படக்கூடிய நன்மை, தீமைகள் பற்றி கூறப்பட்ட விடயங்களை தொகுத்து எழுதுக.

II. கதாசிரியரின் மொழிநடை பற்றி கருத்துரைக்குக.